# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Journal Multidisilinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :25 January 2025*

கோட்டை:7 வாயில்:25 ஜனவரி 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com

---

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


அகப்பொருள் மரபுகளின் பொருண்மைகள்
தெ.மதுபாலா

தற்காலப் பயன்பாட்டில் தன்மை வினைமுற்றுச் சொற்கள்
கோ. கோகிலா

தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியர்கள் சிறந்த ஆசிரியர்கள்
முனைவர்.வி.சேகர்

ஐங்குறுநூற்றில் மருத நில வாழ்வியல் கோட்பாடு
கோ. கோகிலா

ஐங்குறுநூற்று மருதத்திணையில் "வேட்கைப் பத்து" வெளிப்படுத்தும் செய்திகள்
த.கல்பனா

சங்க இலக்கிய அகப்பாடல்களில் தோழியின் உளவியல் கூறுகள்
கு.கலையரசி

ஆற்றுப்படை இலக்கியத்தில் ஐந்திணைசார் உணவுகள்
மு.கௌசல்யா

சங்க இலக்கியங்களில் சமூக உறவுகள்
முனைவர் வெ. நளினி

பறம்பு மக்களின் பரந்த வாழ்வியல்
வீ. மஞ்சு

குறுநில மன்னா ் களின் பொருளாதாரநிலை
மு. சதீஸ்குமார்

கம்பராமாயணம் காட்டும் வாலிவதைப்படலம்
மு.கனகவள்ளி

காப்பியங்களில் மரபுக்கருவிகள்
வீ.விஜயலட்சுமி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


இஸ்லாமிய சூஃபித்துவமும் சடங்கு முறைகளும்
முனைவர் சா.இன்குலாப்

தேவிபாரதியின் "உயிர்தெழுதலின் சாபம்" சிறுகதையில் பெண்மன நிலைபாடு
S.Priyadharshini

விமணியின் குழந்தைச் செல்வம் படைப்பு - ஒரு பார்வை
முனைவர் கு.புஷ்பாவதி

அண்ணாவின் நாடகப் பனுவல்கள் மற்றும் நிகழ்த்துகைகளில் அவரது மறுமலர்ச்சி விடுதலை அரசியல் அரங்கு ஓர் ஆய்வு.
திரு.கு.ரவிச்சந்திரன்

பாரதிதாசனின் பெண்ணுலகம்
கா. கவிதா

பாரதியார் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள்
நா.ரஹமத் நிஷா

“தோட்டியின் மகன்” நாவல் காட்டும் துப்புரவு தொழிலாளர்களின் வாழ்வியல் நிலை
மு. வசந்தி

நூற்றாண்டு கண்ட எழுத்தாளுமை இராஜம் கிருஷ்ணன்-பெண்ணின் குரலாய்
முனைவர் ப.விமலா அண்ணாதுரை

கே.ஆர்.மீராவின் புதினங்களில் வெளிப்படும் பெண்மொழி
நா.சௌந்தர்யா

Creating Virtual Platforms to Showcase Undergraduates' Artworks
1.Yasanthini, G.F


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் அரசன்**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**Lakśana and Lakśya in Music**
**Srivaramangai Sadagopan**

**சதாசிவ ப்ரம்மேந்திரரின் இசை உருப்படிகளில் பகவத்கீதையின் ஸாராம்ஸம்**
**ச. காயத்ரி தேவி**

**Importance of Sāhityam and the Influence of the Great composers in the musical compositions**
**Ms. Janaki Sadagopan**

**தெலுங்கும் தமிழும் தித்திக்கும் கலைவடிவம் பாகவதமேளா ஓர் ஆய்வுநோக்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**

**தமிழ்நாட்டின் மரபுவழி நிகழ்த்துகலையான தெருக்கூத்து**
**கலாநிதி. ஷார்மிலளா றஞ்சித்குமார்**

**திருமந்திரத்தில் காணப்படும் உடல்சார் கருத்துகள் நவீன அறிவியல் பார்வை**
**பேராசிரியர் முனைவர் சு.ஹரிபிரசாத்**



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

# இஸ்லாமிய சூஃபித்துவமும் சடங்கு முறைகளும்

**முனைவர் சா.இன்குலாப், உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை,**
**காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி, மேடவாக்கம் ,சென்னை -600100**

*Dr S.Inqulab, Assistant professor, Department of Tamil,*
*The Quaide Milleth College for Men, Medavakkam, Chennai -600 100*

**ஆய்வுச்சுருக்கம்:**

சூஃபி மெய்ஞ்ஞானிகள் என்போர் இஸ்லாமிய மார்க்கத்தின் ஆன்மிகப் பாதையைக் கட்டமைத்தவர்களாவர். அவர்களின் அயராத பரப்புரைகளின் மூலமாக இஸ்லாத்தை உலகின் பல பாகங்களுக்கும் கொண்டு சேர்த்தனர். சூஃபிகளின் மெய்ஞ்ஞானத் தத்துவங்கள் உலக அரங்கில் இஸ்லாத்தின் மீது புதிய வீச்சை ஏற்படுத்தின. மக்காவில் தோன்றிய சூஃபித்துவம் அங்கிருந்து ஈரான், ஈராக், துருக்கி, சிரியா, பிரான்ஸ், ஆப்பிரிக்கா மற்றும் இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட தெற்காசியாவில் பல நாடுகளிலும் பரவியுள்ளது. சூஃபி தத்துவத்தின் காரணமாகப் பல்வேறான ஆன்மிகப் பாதைகளும், வழிபாட்டுச் சடங்கு முறைகளும், இலக்கிய வடிவங்களும் உருவாயின. சூஃபி மெய்ஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்டுள்ள தத்துவங்கள் உலக அளவில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதைக் காணமுடிகிறது. சூஃபித்துவ ஆன்மிகப் பாதைகள் தரீக்கா என்ற அமைப்புகளால் ஒழுங்குப்படுத்தப்பட்டு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றன. ஒவ்வொரு தரீக்காவும் அவற்றை உருவாக்கிய சூஃபி ஞானிகளின் பெயரால் அழைக்கப்படுகின்றன. அவற்றில் முராத்-முரீத் அதாவது குரு-சீடன் என்ற முறையில் ஆன்மிகப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அப்பயிற்சிகளாவன: 'திக்ரு' எனப்படும் இறைத்துதி, 'ஃபிக்ரு' எனப்படும் ஆழ்ந்த சிந்தனை, 'முரஹபா' என்றழைக்கப்படும் இறைத்தியானம் மற்றும் 'ஸமா' என்ற சுழல் நடனம் முதலியனவாம். இச்சுழல் நடனம் சூஃபிகளின் ஆன்மிகத் தேடலில் முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. குறிப்பாகச் சிஷ்டி மற்றும் மௌலவ்வியா தரீக்காக்கள் அதைப் பின்பற்றுவதையும் அறியமுடிகிறது. இஸ்லாமிய சமயத்தில் தனித்துவம் மிக்கவர்களாக விளங்குகின்ற சூஃபி மெய்ஞ்ஞானிகளின் ஞானப்பாதைகள் குறித்தும், வழிபாட்டுச் சடங்கு முறைகள் குறித்தும் விளக்குவதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்:**

சூஃபித்துவம் பொருள், சூஃபி தத்துவத்தின் தோற்றம் , படிநிலைகள், தியான வழிபாட்டு முறைகள்

***Abstract:***

*Sufi mystics are the founders of the spiritual path of Islam. Through their tireless propaganda they brought Islam to many parts of the world. The Sufi philosophy gave a new impetus to Islam on the world stage. Sufism originated in Mecca and spread from there to many countries in South Asia including Iran, Iraq, Turkey, Syria, France, Africa and India and Pakistan. Sufism gave rise to many different spiritual paths, liturgical practices, and literary forms. It can be seen that the philosophies developed by the Sufi mystics have had a great impact on the world. Sufi spiritual paths are organized by organizations called tariqa and train students. Each tariqa is named after the Sufi sages who created them. In them spiritual training is given in the form of Murad-Mureed i.e. Guru-Disciple. These exercises are: chanting called 'Dhikru', deep meditation called 'Fikru', meditation called 'Murahaba' and spinning dance called 'Sama' etc. This dance is an important part of the Sufi's spiritual quest. The Chishti and Maulaviya Tarikas in particular are also known to follow it. This article aims to explain about the paths of wisdom of the Sufi mystics who are unique in Islam and about the worship rituals.*

***Keywords:***

*Meaning of Sufism, Origin of Sufi philosophy, Hierarchies, Meditation practices*

**முன்னுரை**

சூஃபி தத்துவமானது இறைவனை அடைவதற்கான ஞானப்பாதையாகும். சூஃபித்துவம் என்பது இறைவனை வணங்கி மனிதகுலத்திற்கு தன்னலமற்ற சேவை செய்வது ஆகும். இறைவன் மீது உறுதியான நம்பிக்கையை வளர்த்துக்கொண்டு, இறைநெருக்கத்தில் முற்றிலும் சரணாகதி அடைவதும் ஆகும். இதனை அரபு மொழியில் 'தசவ்வுஃப்' என்பார்கள்.

சூஃபி தத்துவத்தின் மையக் கோட்பாடானது ஆன்மீகத்தின் மீது விருப்பமுள்ளவன், தன்னை முழுமையான சுயபரிசோதனைக்கு உட்படுத்திக் கொண்டு, இறைவனிடம் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்வதாகும். இதையே சூஃபி தத்துவம் வலியுறுத்துகிறது.

**சூஃபி என்பதன் பொருள்**

சூஃபி தத்துவம் குறித்துப் பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன. அது குறித்து மௌலானா ரூமி கூறுகையில் குருடர்கள் யானையைக் கண்ட காட்சிக்கு ஒப்பாகும் என்கிறார்.

'சூஃபி' என்ற சொல் குறித்து ஆய்கையில் 'ஸோபி' என்ற கிரேக்க மொழிச் சொல்லிலிருந்து உருவானது என்றும், அரபியில் இதன் பொருள் தத்துவம் அதாவது அறிவு[1] என்றும் கூறப்படுகிறது.

முஹம்மது நபி வாழ்ந்த காலத்தில் அவருடைய 'திண்ணைத் தோழர்கள்' 'அஹ்லுஸ்ஸுப்பா' என்று அழைக்கப்பட்டனர். 'ஸுப்பா' என்ற சொல்லிலிருந்து சூஃபி என்ற சொல் வந்ததாகவும் கருதுகின்றனர்.

சூஃபி என்ற சொல் கிறித்துவச் சமயத் தாக்கத்தைப் பிரதிபலிக்கும் சொல்லாகவும் இருக்கின்றது. "கிறித்துவச் சமயத்துறவிகள் அணிகின்ற கம்பளி ஆடையை அரபியில் 'ஸூஃப்' (*Suf*) என்பர். இதனையே ஆரம்பகால இஸ்லாமிய ஞானிகளும் தங்கள் ஆன்மீக பாதைக்குப் பெயராகச் சூட்டிக்கொண்டனர்"[2]என்று ஜூலியன் பாலடெக் குறிப்பிடுகிறார்.

மேலும், சூஃபி என்ற சொல் 'ஸஃபா' என்ற அரபுச் சொல்லின் வடிவமாகவும் கூறப்படுகிறது. இது 'தூய்மை' என்ற பொருளைத் தருகிறது. சூஃபி என்பவர் இதயத்தூய்மைப் பெற்றவர்களாக இருந்தார்கள்[3] என்று அல்-ஹுஜ்வீரி என்பவரின் கூற்றில் இருந்து அறியமுடிகிறது

அக்காலத்தில் சூஃபிகள் கம்பளிஆடை அணிந்திருந்தாலும். அந்தக் கம்பளி ஆடை மட்டுமே சூஃபிகளின் அடையாளமாகாது. அகத்தில் ஏற்படுகின்ற மாற்றமே ஒரு மனிதனை சூஃபியாக மாற்றுகிறது[4] என்று குறிப்பிடுகிறார்

சூஃபிகளின் ஆன்மிகப் பாதையை அரபியில் 'தஸவ்வுஃப்' என்று அழைப்பர். உள்ளத்தைப் புடமிட்டு தூய்மைப்படுத்தி மாசற்ற உயர் பண்புகளை வளர்த்து அகத்தையும், புறத்தையும் ஒருசேர பக்குவப்படுத்துவதற்கான வழிவகைகளை அறிந்துகொள்ள உதவும் ஞானமே தஸவ்வுஃப்[5] என்பதாக அறியப்படுகிறது.

சூஃபித்துவம் என்பது மனிதர்களிடத்தில் ஏற்படுகின்ற கோபம், காமம் பொறாமை, பேராசை, அகந்தை போன்ற அகநோய்க்கான மருந்து என்று ஞானிகள் கூறுகின்றனர். இஸ்லாத்தில் மெய்ஞ்ஞானத்தைக் குறிக்கும் வகையில் பல சொற்கள் கையாளப்படுகின்றன. அவை,

இஹ்ஸான் - ஒழுக்கத்தின் பொலிவு

குர்ப் - இறைவனை நெருங்குதல்

தரீக்கத் - ஞானப்பாதை

சுலுக் - இறைவனை நோக்கிய பயணம்

தஸவ்வுஃப் - கம்பளித் துணியைப் போர்த்திக் கொள்ளுதல் [6]

இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள சொற்கள் பொதுவாக இறைவனைப் பற்றியும் ஒழுக்கத்தைப் பற்றியும் போதிக்கின்றது. மேலும், இறைவனை அடையக்கூடிய ஞானப்பாதையைக் காட்டும் வகையில் அமைந்துள்ளதாகவும் அறியமுடிகிறது.

பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த அல்ஹுஜ்வீரி என்பவரே சூஃபி என்ற சொல்லுக்கு வரையறை செய்தவர் ஆவார். பாரசீக மொழியில் அவரால் எழுதப்பட்ட 'கஸ்ஃபுல் மஹ்ஜூப்' (திரைக்குப் பின்னால் தெரியும் காட்சி) என்ற நூலில் சூஃபி என்ற சொல்லுக்கான வரையறை கொடுக்கப்பட்டுள்ளது.

"சஃபா" என்றால் 'தூய்மை' என்று பொருள். சூஃபிகள் இதயத்தூய்மைப் பெற்றவர்களாக இருந்தபடியால் தூய்மையைக் குறிக்கும் 'ஸஃபா' என்ற சொல்லிலிருந்து சூஃபி என்ற சொல் வந்திருக்க வேண்டும் என்ற கருத்தையே மிகச் சரியானதென அல்ஹுஜ்வீரி ஏற்றுக்கொள்கிறார்[7]

சூஃபிநெறி முகம்மது நபியிடமிருந்தே வந்தது என்ற கருத்து பலராலும் கூறப்படுகிறது. நபிகள் நாயகம் சூஃபி குணங்களின் இருப்பிடமாகத் திகழ்ந்தார் . எளிமை, வறுமை, தருமம், தாராளம் போன்ற குணங்கள் எல்லாம் சூஃபிக்குரியன. ஆடம்பரமான வாழ்க்கையை வெறுப்பவராகவும்; எளியவராகவும்; பகைவர்களை மன்னிப்பவராகவும்; ஒழுக்கம் உள்ளவராகவும்; நீதி தவறாதவராகவும் விளங்கிய முகமது நபி ஒரு பரிபூரண சூஃபிக்கான இலக்கணமாகத் திகழ்ந்தார். அவரைப் பின்பற்றித்தான் சூஃபிகள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.[8]

உண்மையான சூஃபி இத்தகைய உயர்ந்த பண்புகளைக் கொண்டவராகவும் உண்மையை உணர்ந்தவராகவும், இன்பம், துன்பம் இரண்டையும் சமநோக்கில் காண்பவராகவும் விளங்க வேண்டும். ஆடம்பரத்தையும், சுகபோகத்தையும் அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் எக்காலத்திலும் மெய்ஞ்ஞானிகளாகக் கருதப்படமாட்டார்கள் என்பதை அறிய முடிகிறது.

முகம்மது நபியவர்களை 'அல்-இன்ஸான் அல்-காமில்', அதாவது, இறைவனின் அறநெறிக்கு உதாரணமான முதன்மையான பூரணத்துவ மனிதர் என்று அழைக்கின்றனர். அவரைத் தமது முதன்மையான தலைவராகவும், ஆன்மீக வழிகாட்டியாகவும் சூஃபிகள் கருதுகின்றனர். முதலாவது கலீபாவான அபூபக்கர் அவர்களிடமிருந்து உருவாகியதாக அல்ஹுஜ்வீரி என்ற புகழ்பெற்ற சூஃபி கூறுகின்றார். ஆனால், பெரும்பாலோர் சூஃபி வழியின் ஞானவனாக முகமது நபியின் மருமகனான அலியைக் கூறுகின்றனர். அவரையே 'சூஃபித்துவத்தின் தந்தை' என்றும் எல்லாச் சூஃபி பாதைகளும் அவரிடமிருந்தே உருவாயின என்றும் கூறுகின்றனர்.

**சூஃபி தத்துவத்தின் தோற்றம்**

சூஃபி தத்துவம் தோன்றியதற்கான காரணங்கள் குறித்துப் பல கருத்துகள் நிலவுகின்றன. கி.பி. 661-750 உமையாட் ஆட்சிக் காலத்தில் இஸ்லாமியரின் ஆடம்பர வாழ்வை எதிர்க்கும் முகமாக பக்திமிக்க இஸ்லாமிய இயக்கமாகச் சூஃபிசம் உருவானது[9] என்று செ. கணேசலிங்கன் கூறுகிறார்.

இஸ்லாம்,கிறித்துவம், யூத மதங்கள் அனைத்தும் கிரேக்க தத்துவ இயலை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன. குறிப்பாக இஸ்லாம் தத்துவ இயல் பிளாட்டோ, அரிஸ்டாட்டில், சாக்ரடீஸ் முதலியோர் கருத்துக்களையும், இந்தியாவில் இருந்து மகாயான (புத்தப்பிரிவு) வேதாந்தம் ஆகிய கருத்துகளையும் பெற்றிருந்தது[10] என்று இ.எஸ்.டி. ஞானன் கூறுகிறார்.

சூஃபி நெறியானது பிரபஞ்சமும், கடவுளும் ஒன்று, இரண்டனையும் தனித்தனியாகக் கருதமுடியாது என்னும் நியோ பிளேட்டோனிசத்தின் ஒருமைவாதக் கருத்தோடு ஒப்பிட்டுப் பேசப்படுகிறது. சூஃபி தத்துவம் கடவுள், பிரபஞ்சம் மற்றும் மனிதர்கள் இம்மூன்றுக்குமிடையே ஒருமை இருப்பதாகக் கூறுகிறது. மனிதர்களிடத்தில் உள்ள ஆன்மாவின் காரணமாக கடவுளைப் போலவே இருக்கிறார்கள் என்ற கருத்தையும் கொண்டிருக்கிறது[11].

பொதுவாக ஒரு மதத்தின் தத்துவமானது அதற்கு முன் தோன்றிய பல்வேறு மதங்களிலுள்ள தத்துவங்களின் தன்மையை ஆராய்ந்து புதியதோர் தத்துவத்தை உருவாக்குகிறது. இது அனைத்து மதங்களுக்கும் பொருந்தி வரக்கூடிய தன்மையாகும். அதன் அடிப்படையிலேயே இஸ்லாத்தில் சூஃபி தத்துவமும் உருவாகி இருப்பதை அறிய முடிகிறது. இது குறித்து ராகுல் சாங்கிருத்யாயன் குறிப்பிடுகையில்

> "வெறும் பக்தி அறிவைத் திருப்திபடுத்தாது. வெறும் தர்க்கம் பக்தனை மன நிறைவு கொள்ளச் செய்யாது என்ற காரணத்தினால் தர்க்கவியலையும் பக்தியையும் அடிப்படையாகக் கொண்டு சூஃபிசம் உருவானது" [12]என்பார்.

அன்றைய காலகட்டத்தில் இஸ்லாமிய மார்க்கம் உலக அரங்கில் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்காக தத்துவங்கள் அவசியமாயின. அவ்வாறு உருவாக்கப்பட்ட தனித்துவம் மிக்க தத்துவங்கள் இஸ்லாத்தின் சூஃபித்துவம் தோன்றுவதற்கும், பரவுவதற்கும் காரணமாக அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

**சூஃபித்துவத்தின் படிநிலைகள்**

உலகின் பல்வேறு பகுதிகளில் பரவியுள்ள சூஃபித்துவம் பல படிநிலைகளை கொண்டதாக உள்ளது. துறவு நிலையில் தனிமையான இடத்தில் அமர்ந்து இறைவனைத் தியானித்தல் அதன் படிநிலைகளில் ஒன்றாகும். அவ்வாறு தியானிக்கின்ற போது இறைவனின் பெயரை நாவால் தொடர்ந்து உச்சரித்து, பிறகு மனத்தாலும் உச்சரிக்க வேண்டும். எண்ணங்கள் முழுவதையும் ஒருமுகப்படுத்தும்போது, அனைத்து ஆன்மிக உண்மைகளும் தெளிவாகத் தெரிய ஆரம்பிக்கின்றன என்று சூஃபிகள் கூறுகின்றனர். இறைவனிடமிருந்து வந்த உயிர், மீண்டும் இறைவனைச் சென்றடைய செய்யும் முயற்சிகளை 'ஆன்மாவின் பயணம்' என்று சூஃபிநெறி கூறுகின்றது. இப்பயணத்தை மேற்கொள்ள மனத்தை ஒருநிலைப்படுத்த வேண்டியுள்ளது. அதற்கான படிநிலைகளை சூஃபிகள் உருவாக்கியுள்ளனர்.

1. *பாவங்களுக்கு வருந்தி தன் ஆன்மாவை தூய்மைப்படுத்துதல் (உபூதிய்யத்)*
2. *ஐம்பொறிகளின் ஆசைகளிலிருந்து நீங்கி இறைவனைக் காதலித்தல் (இஷ்க்)*
3. *இறைவனுக்காக அனைத்தையும் துறப்பது (ஜீஹத்)*
4. *துறவு நிலையில் இறைவனின் தரத்தையும் பண்பு கூறுகளையும் சிந்திப்பது (மகரிபத்)*
5. *தன்னை மறந்து இறைவனோடு ஒன்றுவது (வஜித்)*
6. *உண்மையான உண்மையை உணர்ந்து நிறைப்பது (ஹகீகத்)*
7. *இறைவனோடு இரண்டற கலந்து விடுவது (வஸ்ல்)*[13]

இவை மட்டுமின்றி இஸ்லாத்தின் நான்கு பாதைகளான ஷரியத், தரீக்கத், மக்ரிபத், ஹக்கீகத் முதலானவற்றை சூஃபிகள் கடக்க வேண்டும் என்பர். இவற்றுள் ஷரியத் என்பது இஸ்லாமிய நடைமுறைச் சட்டமாகும். மற்ற மூன்றும் தியானங்களின் வெவ்வேறு படிநிலைகளாகும். ஷரியத்தை அனைவரும் பின்பற்றத்தக்கதாகவும் மற்றவை இஸ்லாமிய ஞானவான்களான சூஃபிகள் மட்டும் பின்பற்றக் கூடியனவாகவும் அமைந்துள்ளன.

**தரீக்கா (ஆன்மிகப்பாதை)**

இஸ்லாத்தின் ஆன்மிகப் பாதையை வழிகாட்டுவதற்கும் பயிற்சி அளிப்பதற்கும் ஏற்ற இடத்தை தரீக்கா என்று அழைக்கின்றனர். 'தரீக்' அல்லது 'துர்க்' என்ற சொல்லுக்குப் 'பாதை' என்று பொருள். சூஃபி ஞானிகளான ஹசன் பசரி, இமாம் கஸாலி போன்றவர்களின் பேச்சும் எழுத்தும் தரீக்காக்கள் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தன எனலாம்.

பதினோராம் நூற்றாண்டில் அல் ஹாஜ்விரி என்பவர் எழுதியுள்ள 'கஸ்ஃபுல் மஹ்ஜீப்' (திரைகளுக்குப் பின்னால்) என்ற நூல் தரீக்காக்கள் குறித்துப் பாரசீக மொழியில் எழுதப்பட்ட முதல் நூலாகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ஈராக்கில் வாழ்ந்த கிறித்துவ மெய்யுணர்வாளரான இஷாக் என்பவர் தரீக்கத்தின் மூன்று முக்கிய அம்சங்களைக் குறிப்பிட்டுள்ளார்..அவை: பாவத்திற்கு வருந்துதல், புனிதப் படுத்துதல், முழு நிறைவு

பெறுதல் ஆகியனவாம். இம்மூன்று தன்மைகளும் ஆன்மீகப் பாதையில் செல்வோரைக் கடைந்தேற்றக் கூடியனவாக அமைந்துள்ளன. இறைநம்பிக்கை◌யானது உடலை◌யும், மனத்தையும் தீயவழ◌ியில் செல்லவிடாமல் கட்டுப்பாட்டிற்குள் வைத்த◌ிருக்கின்ற வேலையைச் செய்கிறது. எல்லா மதங்களும் பாவத்திற்கு வருந்துதல், 'தான்' என்னும் உணர்வை நீக்குதல், தியானத்தின் வழி முழு நிறைவு பெறுதல் என்று ஆன்மிகப் பாதையைப் போதிக்கின்றன. இஸ்லாமும் இத்தகைய ஆன்மிகப் பாதையைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது தெளிவாக◌ிறது.

இத்தகைய ஆன்மிகப்பாதையான தரீக்காவை வழிநடத்திச் செல்வதற்காகப் பல தரீக்காக்களைச் சூஃபி ஞானிகள் உருவாக்கினர். அவற்றை உருவாக்கியவர்களின் பெயராலே அத்தரீக்காக்கள் அழைக்கப்பட்டன. அவற்றுள் சில தரீக்காக்கள் குறித்துச் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

**தரீகாக்கள்:(ஞான வழி மார்க்கப் பிரிவுகள்)**

- **சிஸ்டி தரீக்கா:** கவாஜா முய்னுதீன் சிஷ்டி இதை இந்தியாவுக்கு முதலில் கொண்டு வந்தார். இவர் பெர்சியாவில் கி.பி 1200 இல் பிறந்தார். மத்திய ஆசியா வழியாக பயணம் செய்து இந்தியாவிற்கு வருகைபுரிந்த அவர் அஜ்மீரில் குடியேறினார் . அங்கேயே அவருடைய அடக்கத்தலம் உள்ளது. அஜ்மீர் தர்கா என்று அழைக்கப்படுகிற அது இந்தியாவில் பிரபலமானதாக விளங்குகிறது.
- **சுஹ்ரவர்தி தரீக்கா:** ஷேக் ஷஹாபுதீன் சுஹ்ரவர்தி பாக்தாத்தில் சுஹ்ரவர்தியின் சூஃபி வரிசையை நிறுவினார். சுஹ்ரவர்தி வரிசையின் சூஃபி ஞானிகள் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் பிரபலமாயினர். முல்தானில் குடியேறிய ஷேக் பஹாவுதீன் ஜகாரியா, சுஹ்ரவர்தி வரிசையின் முதல் முக்கியமான துறவி ஆவார்
- **நக◌ ஷபந்தியா தரீக்கா :** இத்தரீக்காவானது குவாஜா பாக்கி புல்லாவால் நிறுவப்பட்டது, ஷேக் பிர்சாய் என்பவரால் இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டது. முகலாய மன்னர்களான பாபர்,அக்பர், ஔரங்கசீப் உட்பட பலராலும் பின்பற்றப்பட்ட தரீக்காவாகும்
- **ஃபிர◌தௌசியா தரீக்கா:** இந்தியாவில் நிறுவப்பட்டு வளர்ந்த ஒரே சூஃபி தரீக்காவாகும். ஷரஃபுதீனால் நிறுவப்பட்டு பீகாரில் மட்டுமே இருந்தது. அவர் 'மக்துபத்' மற்றும் 'முல்பசாத்' முதலான இலக்கியங்களை இயற்றினார்
- **காதரியா தரீக்கா:** இது இந்தியாவில் மிகவும் பிரபலமான தரீக்காவாகும். ஈராக்கில் ஜிலான் நகரைச் சேர்ந்த முகைதீன் அப்துல் காதிர் என்பவரால் உருவாக்கப்பட்டது. ஷாஜகானின் மகன் தாரா ஷிகோ இத்தரீக்காவில் தன்னை இணைத்துக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது..

★ **மௌலவியா தரீக்கா:** இந்த மவ்லவி தரீக்கா மௌலானா ஜலாலுத்தீன் ரூமியால் உருவாக்கப்பட்டது. அவருடைய மரணத்திற்குப் பிறகு, அவரைப் பின்பற்றியவர்களில் பலர் இன்றைய துருக்கியில் உள்ள கொன்யாவில் சூஃபி அமைப்பை நிறுவினர்.

★ **ரிபாயி தரீக்கா:** அஹ்மத் அல்-ரிஃபாயி ஈராக் நாட்டில் பஸ்ரா எனும் நகரில் அபூஉபைதா என்னும் ஊரில் பிறந்தார். அவரால் நிறுவப்பட்ட ரிஃபாயி தரீக்கா தெற்காசியாவில் பரவியுள்ளது. தமிழகத்தில் உள்ள பக்கீர்சாக்கள் இத்தரீக்காவைப் பின்பற்றுவோராக உள்ளனர் .

சூஃபிகளின் ஆன்மிகப் பாதையில் செல்ல விரும்புவோர் தரீக்காக்களில் இணைந்து சில பயிற்சி முறைகளைப் பின்பற்ற வேண்டும். அப்பயிற்சியானது பல படிநிலைகளைக் கொண்டதாக உள்ளது. அவற்றினைக் காண்போம்.

### முரீத் -முராத் (மாணவன்- குரு)

தரீக்கத்தின் வழியில் செல்லவிரும்பும் ஒருவர் பயிற்சியை மேற்கொள்வதற்கு குருவானவர் தேவைப்படுகிறார். வழிகாட்டி இல்லாமல் எவரும் வழி நடந்து செல்ல இயலாது. அத்தகைய வழிகாட்டியைக் குரு-முராத் என்றும், சீடரை-முரீது என்றும் சூஃபித்துவம் அழைக்கிறது. சூஃபிகளைப் பொறுத்தவரையில் தரீக்கத் என்பது ஒரு மாணவனின் இரண்டாவது பிறப்பாகக் கருதப்படுகின்றது. ஆன்மிகப் பயணம் வழிகாட்டியின் துணை இன்றி அமையாது. வழிகாட்டியைக் குரு, ஷைகு, பீர் , என்றும் அழைக்கின்றனர்.

### திக்ரு (இறை துதி)

கிறித்துவ சமயத்தில் கூறப்படுகின்ற இறைவனை நினைத்தல் (Rememberance of God) என்ற சொல்லே அரபு மொழியில் 'திக்ரு' என்று அழைக்கப்படுகிறது. இந்தத் 'திக்கு'ருவானது ஞானகுருவின் மூலம் அளிக்கப்படுகின்றது. திக்குரு செய்பவர்கள் நான்கு நிலைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று இஸ்லாமிய கலைக்களஞ்சியம் கூறுகிறது.

★ அஹலுல் கல்வத்து-தனித்திருந்து 70 ஆயிரம் முறை 'லாயிலாஹ இல்லல்லாஹு' (வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை) என்ற மூலமந்திரத்தைச் சொல்வது

★ அஹ்லல்ூல் அஜ்வத்தி-முப்பதாயிரம் தடவை மூலமந்திரத்தைச் சொல்வது

★ அஸ்காவுல் அவ்பாக்-பன்னிரெண்டாயிரம் முறை சொல்வது

★ அஸ்காபுல் கித்மத்-இரவு பகல் பாராமல் எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருப்பது[14].

திக்ருக்களில் 'ல◌ாயிலாஹ இல்லல்லாஹ்' என்ற மூலமந்திரமும் 'அல்லாஹ்' என்ற திருநாமமும் இறைத்தொடர்ப◌ை உருவாக்கும் என்று சூஃபிகள் நம்புகின்றனர். ஆகையால், அவற்றை எந்நேரமும் சொல்லிக் கொண்டு இருக்க வேண்டும் என◌்று வலியுறுத்துகின்றனர்.

**ஃபிக்ரு-ஆழ்ந்த சிந்தனை**

எப்பொழுதும் இறைவனைப் பற்றியே நினைத்துக் கொண்டு இருக்க வேண்டும் என்று நோக்கத்தில் சூஃபித்துவத்தின் அடிப்படைக் கொள்கையாக இது அமைந்துள்ளது. 'ஃபிக்ரு' குறித்து ஜாவீத் நூர்பக்ஷ் என்பவர் கூறுகையில்

"ஒருமணி நேரம் மேற்கொள்கின்ற சிந்தனையானது 70 ஆண்டுகள் தொழுவதை விட மேல◌ானது. இறைவனைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையை விட மேல◌ான வணக்க முறைகள் எதுவும் இல்லை" என்கிறார்" [15]

இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள 'ஃபிக்ரு' (ஆழ்ந்த சிந்தனை) என்பது தன்னைப் பற்றி எண்ணாமல் இறைவனது படைப்புகள் குறித்தும், அவனால் அளிக்கப்பட்ட கொடைகள் குறித்தும், மனிதர்கள் மீது விதிக்கப்பட்ட கடமைகளில் முக்கியத்துவம் குறித்தும் சிந்திக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

**முரஹபா- தியானம்**

மனத்தை ஒருநிலைப்படுத்தி இறைவன்பால் கவனத்தைச் செலுத்த வேண்டும் என◌்ற வழிபாட்டு முறைகளுள் ஒன்றாகத் தியானம் வல◌ியுறுத்தப்படுகிறது.

இறைவணக்கத்திற்கும், இறைத்த◌ியானத்திற்கும் உள்ள வேறுபாட்டை புரிந்துகொள்ள வேண்டும். இறைவணக்கம் உலகின் மீது உள்ள பற்றுதலைக் கைவிடாமல் இறைவனை நினைக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டிருக்கிறது. இறைத்தியானம் என்பது உலக◌ின் மீதான பற்றுதலை விட்டுவிலகி இறைவனை அடைய வேண்டும் என்று கூறுகிறது. உண்மையான ஞ◌ானிகள் பொன், பொருளை விட்டு விலகி பரம்பொருள் பற்றிய சிந்தனையை மட்டுமே கொண்டிருப்பார்கள். இத்தகைய உலகப் பற்றுதலற்ற தியானத்தைச் சூஃபிகள் 'முரஹபா' என்று அழைக்கின்றனர்.

இஸ்லாம் மார்க்கம் துறவறத்தைப் பற்றிப் பேசவில்லை. முகம்மது நபியவர்களும் 'ஹீரா' குகையில் தியானம் மேற்கொண்டார் என்பதை இஸ்லாமிய வரலாறு கூறுகிறது. ஆகையால், சூஃபி மெய்ஞ்ஞானிகளுள் பலர் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு, அத்தகைய த◌ியானங்களை மேற்கொண்டிருக்கின்றனர். அத்தியானங்களைச் செய்வதற்குச் சில ஒழுங்கு முறைகளை உருவாக்கியுள்ளனர். அவற்றை குறித்து இனிக் காண்பப◌ோம்.

**தியான வழிபாட்டு ஒழுங்கு முறைகள்**

தியானம் என்பது மனத்தை ஒருமுகப் படுத்துவதற்கான பயிற்சியாகும். அதைச் செய்வதற்கு சில வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. தியானத்தில் ஈடுபடுவதற்கு முன் உடலைத் தூய்மைப்படுத்திக் கொள்ளுதல்; மெல்லிய ஆடைகளை அணிதல்; சமதளமான தரையில் அமர்தல்; உடலை அசைக்காமல் கண்களை மூடிக்கொண்டிருத்தல்; இறைவனைத் தவிர மற்ற தேவையற்ற எண்ணங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுதல்; அமரும்போது 'கிப்லா' (மக்காவில் உள்ள திருத்தலம்) பார்த்த வண்ணம் அமர்தல் ஆகியனவாம். தியானத்தை ஒருநாளின் குறைந்தது ஒவ்வொரு 15 நிமிடங்களும் தியானம் செய்யும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். பொதுவாக இரவு நேரங்கள் தியானம் செய்வதற்கு உகந்ததாகக் கருதப்படுகிறது[16].

**தியானத்தின்போது அமரும் முறைகள்**

தியானம் செய்யும்போது அமரும் முறைகளில் சிலவற்றை சூஃபிகள் பின்பற்றியுள்ளனர். அவை பின்வருமாறு,

- ★ முழங்கால்களை மடித்து (வஜ்ராசன முறையில்) குதிகால்கள் மீது அமர்ந்து கொண்டு, வலது உள்ளங்கையை இடது தொடையின் மீது வைக்க வேண்டும். இடது கையால் வலது கையின் மணிக்கட்டுப் பகுதியை இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும்.
- ★ இயல்பான நிலையில் அமர்ந்து மேற்குறிப்பிட்டதைப் போல கைகளைப் பற்றிக்கொள்ள வேண்டும்.
- ★ கால்களை ஒன்றுக்கொன்று குறுக்காக வைத்து , முழங்கால்களை உயர்த்தி கைகள் முழங்கால்களைச் சுற்றி மடக்கிய நிலையிலும் வைத்துக் கொள்ள வேண்டும். இடது கையால் வலது கை மணிக்கட்டு பகுதியைப் பிடித்தவாறு தலையை இடது புறமாகச் சற்று முன் பக்கம் சாய்ந்த நிலையில் அமர வேண்டும்.
- ★ இதைப்போல் இருக்கையில் அமர்ந்த நிலையில் தியானத்தை மேற்கொள்ள வேண்டும்[17].

இங்குக் கூறப்பட்டுள்ள முறைகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து சூஃபிகள் தியானம் மேற்கொள்கின்றனர். கைகளால் மணிக்கட்டுப் பகுதியைப் பிடித்துக் கொள்ளும் போது நாடித்துடிப்பை உணர முடிகிறது. அதுவே உயிரின் துடிப்பாகும். அந்த உயிர்த்துடிப்பில் மனத்தை வைத்து உணருவதே தியானம் ஆகும். இத்தகைய தியானமுறை ஆன்மீகப் பாதையில் செல்வோருக்குச் சுயக்கட்டுப்பாட்டை அளிக்கிறது. அமைதி மற்றும் இறைவனை நோக்கி மனத்தை ஒருமுகப் படுத்துவதற்கான முயற்சிகளையும் வழிநடத்திச் செல்வதற்கு உதவுகின்றது.

**ஸமா என்ற இசை நடனம் (Whirling Derveshes)**

சூஃபிகளின் தியான முறைகளில் 'ஸமா' என்ற சூழல் நடனம் மிகவும் பிரபலமானதாகும். இந்நடனத்தைப் பின்பற்றும் சூஃபிகளை ஆங்கிலத்தில் *Whirling Derveshes* என்று அழைக்கின்றனர்.

சூஃபிகள் தம்மை மறந்து இறைவனிடம் ஒன்றுவதற்கான ஒரு கருவியாக இசையைப் பயன்படுத்தினர். 'ஸமா' என்னும் 'சுழல்' நடனத்தைத் 'திக்ரு' செய்வதற்கான ஓர் ஊடகமாக வைத்திருக்கின்றனர். ஸமா என்ற சொல்லுக்கு 'கேட்டல்' என்று பொருள். இது ஒரு வகையான சுழல் நடனம் ஆகும். இந்த நடனமுறை 'சிஷ்டியா தரீக்கா'விலும், ரூமியின் 'மௌலவியா தரீக்கா'விலும் முக்கிய பங்கு வகிக்கிறது. ஸமா நடனத்தின் வேரானது ஈரானில் தொடங்குகிறது. இதன் தோற்றம் கி.பி. 13ம் நூற்றாண்டில் பாரசீக கவிஞரும் பிரபலமான சூஃபி ஞானியுமான மௌலானா ரூமியின் போதனைகளில் ஒன்றாக அறியப்படுகிறது. அவரால் உருவாக்கப்பட்ட மௌலவியா தரீக்காவில் ஸமா நடனமாட பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

**ஸமா நடனத்திற்கான விதிமுறைகள்**

ஆன்மிகத்தேடலின் ஒரு வடிவமாக விளங்கும் ஸமா நடனத்திற்கென சில விதிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

- ★ இடது காலை நிலையாக வைத்து, உடம்பைச் சுழற்ற வலது காலை பயன்படுத்துவார்கள்
- ★ கடிகார சுழற்சிக்கு எதிர் திசையில் சுழலுவார்கள்
- ★ கைகளை நீட்டி, வலது உள்ளங்கை மேலே வானத்தைப் பார்த்தபடி திறந்து இருக்க, இடது உள்ளங்கை கீழே தரையைப் பார்த்தபடி இருக்கும்படி வைத்துக் கொள்வார்கள்.
- ★ திறந்த கண்களுடனே சுழல்வார்கள்
- ★ முதல் பதினைந்து நிமிடங்களுக்கு மெதுவாகச் சுழன்று, அடுத்து முப்பது நிமிடங்கள் வேகமாகச் சூழன்று கொண்டிருப்பார்கள்.

இந்நடனத்தை இறைசக்தியுடன் இணைக்கும் வழிமுறையாகச் சூஃபிகள் நம்புகின்றனர். ஸமா நடனத்தின் சுழற்சியானது பிரபஞ்சத்தில் உள்ள கோள்கள் மற்றும் வான்பொருட்களின் சுழற்சியை அடையாளம் படுத்தும் விதமாகக் கருதப்படுகிறது. இதில் நடனமாடும் கலைஞர்கள் தீவிரமாகச் சுழலும் போது இறைசக்தியுடன் ஒன்றிவிடுகின்ற தன்மையை அடைவதாக நம்புகின்றனர். அவர்கள் சுழலும்போது இறைவனின் அருளைப்பெற வலது உள்ளங்கை மேல் நோக்கிப் பார்த்தவாறும், பெற்ற அருளை மனிதகுலத்திற்கு வழங்க இடது உள்ளங்கை கீழ் நோக்கிப் பார்த்தவாறும் சுழல்கின்றனர்.

இறைபக்தியின் மீது கொண்டுள்ள காதல் மற்றும் சரணாகதி அடைவதை நோக்கமாகக் கொண்டு இந்தச் சுழல் நடனம் ஆடப்படுகிறது. இந்நடனத்தில் பங்கேற்பாளர்களை வழிநடத்த 'ஷேக்' அல்லது 'ஆன்மீக வழிகாட்டி' முக்கிய பங்கு வகிக்கிறார். இந்நடனமானது மத்திய கிழக்கின் பல்வேறு நகரங்களான துருக்கி, சிரியா, எகிப்து, ஈராக் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் நடத்தப்படுகிறது.

**முடிவுரை**

சூஃபி தத்துவம் இஸ்லாமிய ஆன்மிகத் தேடல்களில் விளைவால் உருவானதாகும். அத்தத்துவத்தை மக்களிடத்தில் கொண்டு செல்வதற்கு சூஃபி மெய்ஞ்ஞானிகளின் அயராத உழைப்பும் காரணமாக அமைந்துள்ளது தெளிவாகிறது. பல்வேறு தரீக்காக்களின் செயல்பாடுகள் உலகின் பல பகுதிகளுக்கும் பரவி மக்களிடையே பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதைக் காணமுடிகிறது. ஆன்மிகச் சடங்குகள், தியானப்பயிற்சி முறைகள் முதலியன சூஃபிகளைத் தனித்துவமான அடையாளம் கொண்டவர்களாகக் காட்டுகிறது.

**மேற்கோள்கள்:**


*1.இ.எஸ்.டி.செ. ஞானன் (தொகு),தத்துவ தரிசனங்கள், ப. 345*

*2.Julian Baldic , Mystical Islam An Introduction to Sufism,p.15*

*3.நாகூர் ரூமி , சூஃபி வழி: இதயத்தின் மார்க்கம், ப.59*

*4.மேற்படி, ப. 458*

*5.மணவை முஸ்தபா,தமிழில் இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்கள், ப.2*

*6.முகமது ஹமீதுல்லா, இஸ்லாம் ஓர் அறிமுகம், ப. 116*

*7.நாகூர் ரூமி,சூஃபி வழி: இதயத்தின் மார்க்கம்,ப.59-60*

*8.மேற்படி,ப. 51*

*9.செ.கணேசலிங்கன், சித்தர் சித்தாந்தமும் சூபிசமும்,ப. 68*

*10.இ.எஸ்.டி. செ.ஞானன்(தொகு), தத்துவ தரிசனங்கள்,ப. 345*

*11.கமரன்கோடேலக், சூஃபி தத்துவத்தின் தியோ பிளாட்டோனிஸ்ட் வேர்கள்-ஒப்பீட்டுத் தத்துவம்-: (Islamic philosophy-இணையம்)*

*12.ராகுல் சாங்கிருத்யாயன் , இஸ்லாமியத் தத்துவ இயல்,ப .47*

*13.மீ.அ.மு.நாசீர் அலி, இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் சூஃபித்துவம்,ப. 38*

*14. அப்துற்றஹீம், இஸ்லாமியக் கலைக்களஞ்சியம், தொகு.3,பக். 302-303*

*15.Javeed Nurbakhsh ,In the Paradise of the Sufis, p. 54*

*16.மேற்படி, p.77 -78*

*17.மேற்படி, p.79-80*


**துணை நூற் பட்டியல்**

1. கணேசலிங்கன்.செ, சித்தர்கள் சித்தாந்தமும் சூபிசம◌ும், குமரன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2004
2. ஞானன் செ,இ.எஸ்.டி.(தொகு), தத்துவ தரிசனங்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை,1999
3. நாக◌ூர் ரூமி, சூஃபி வழி: இதயத்தின் மார்க்கம், சிக்ஸ்த்சென்ஸ் பப்ளிகேஷன்ஸ், சென்னை,2014
4. நாசீர் அலி மீ.அ.மு. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் சூபித்துவம், எம்.ஐ.இ.டி.சொசைட்டி, திருச்சி
5. மணவை முஸ்தபா, தமிழில் இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்கள், மீரா ஃபௌண்டேசன் வெளியீடு, AE-103, அண்ணா நகர், சென்னை, முதற்பதிப்பு, 1981
6. முகமது ஹமீதுல்லா, இஸ்லாம் ஓர் அறிமுகம்,பிலால் பப்ளிஷிங் ஹவுஸ்,திருநெல்வேலி,முதற்பதிப்பு,1978
7. ராகுல் சாங்கிருத்யாயன் , இஸ்லாமியத் தத்துவ இயல்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, முதற்பதிப்பு,2003

**ஆங்கிலநூல்கள்:**

1. Julian Boldic , Mystical Islam An Introduction for Sufism, London,I.B.Tauris&Co Ltd.,1989
2. Javad Nurbakhsh, In the Paradise of Sufis,New York,Khanigahi-Nimathilahi Publications,1979

**இணையதளங்கள்:**

1. கமரன்கோடேலக், சூஃபி தத்துவத்தின் தியோ பிளாட்டோனிஸ்ட் வேர்கள்-ஒப்பீட்டுத் தத்துவம்-: (Islamic philosophy-இணையம்)

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com